# நவீன இஸ்லாமிய தமிழ்க் காப்பியங்களில் திருநபிகாவியம் - சிறப்பாய்வு

**Supervisor**
*Dr. MA. Mohamed Ramees,*
*Senior Lecturer,*
*Faculty of Arts and Culture*

**Researcher**
*Miss. MIF. Mubeena,*
*Department of Languages,*
*Faculty of Arts and Culture*

## 1.1 அறிமுகம்

தமிழ் இலக்கியப் பரப்பிலே காணப்படுகின்ற அனைத்து விதமான இலக்கிய வடிவங்களையும் பின்பற்றி இஸ்லாமியப் புலவர்கள் தங்களது படைப்புக்களை வெளியிட்டனர். இஸ்லாமியப் புலவர்கள் தமிழிலக்கிய மரபினைப் பின்பற்றிப் படைத்த இலக்கியங்களுள் காப்பியங்கள் பிரதானமானவை. பதினேழாம் நூற்றாண்டு தொடங்கி தமிழில் இஸ்லாமியக் காப்பியங்கள் பல எழுந்துள்ளன. அவை அனைத்தும் மரபு தழுவிய காப்பியங்களாகும். பிற்பட்ட காலங்களில் ஏற்பட்ட உரைநடை வளர்ச்சியின் காரணமாக இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் பல நவீன அம்சங்களை உள்வாங்கிக் கொண்டது. அதில் காப்பியம் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை அடைந்து வருகின்றது எனலாம். இந்தவகையில் எழுதப்பட்ட நவீன காவியமாக திருநபி காவியம் விளங்குகிறது.

## 1.2 ஆய்வின் நோக்கம்

இந்தவகையில் இவ்வாய்வானது பிரதான நோக்கமாக திருநபி காவியத்தின் சிறப்பினை மதிப்பிடுதலையும் நவீன இஸ்லாமியத் தமிழ்க் காப்பியங்களை அறிமுகப்படுத்துதல், திருநபி காவியத்தில் கையாளப்படும் நவீன உத்திமுறைகளை அடையாளங்காணல் ஆகியவற்றை துணைநோக்கங்களாகவும் கொண்டு காணப்படுகின்றது.

## 1.3 ஆய்வு முறையியல்

இவ்வாய்வில் முதலாம் நிலைத்தரவுகளும் இரண்டாம் நிலைத்தரவுகளும் பயன்படுத்தப்படுகின்றன. அந்தவகையில் ஜின்னா ஷரீபுத்தீனின் திருநபி காவியமும் அவருடனான நேர்காணல்களும் முதலாம் நிலைத்தரவுகளாகப் பயன்பட இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் தொடர்பான நூல்களும் கட்டுரைகளும் இரண்டாம் நிலைத்தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## 1.4 தீர்வுகளும் நிறைவுரையும்

இவ்வாய்வில் இஸ்லாமியத் தமிழ் காப்பியங்களின் தனித் தன்மைகள் பேணப்படுவதுடன் நவீன இஸ்லாமியத் தமிழ் காப்பியத்தின் சிறப்புக்களையும் அறியமுடிகின்றது. இது ஒரு நவீன காவியமாக இருந்தாலும் மரபுக் கவிதை அமைப்பில் அமைந்த காவியமாகவும் காணப்படுகின்றது.

***Key words:*** இஸ்லாமியத் தமிழ் இலக்கியம், நவீன இஸ்லாமியத் தமிழ்க் காப்பியங்கள்